# மெட்ரோ நிலையங்களில் சீருந்துகள் நேரம் மாற்றம்

**சென்னை, அக். 30–** மெட்ரோ ரயில் நிலையங்களில், ஷேர் ஆட்டோ, டாக்சி மற்றும் சீருந்து போக்குவரத்து நேரம், மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

ரயிலில் வரும் பயணியர், நிலையங்களில் இருந்து, செல்ல வேண்டிய இடங் களுக்கு விரைவாக செல்ல, குறைந்த கட்டணத்தில், வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில், கிண்டி, டி.எம்.எஸ்., உட்பட, ஐந்து நிலையங்களில், ஷேர் ஆட்டோ வசதியும், சின்னமலை, கோயம் பேடு உட்பட, ஏழு நிலை யங்களில், ஷேர் டாக்சி வசதியும், நந்தனம், ஆயிரம்விளக்கு உட்பட, 11 நிலையங்களில், சீருந்து வசதியும் செய்யப் பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் காலை, 6:00 மணியில் இருந்து இரவு, 11:00 மணி வரை இயக்கப்பட்டு வந்தன. இனி, இந்த வாகனங்கள் இயக்கம், காலை, 7:00 மணிக்கு துவங்கி இரவு, 11:00 மணி வரை இயக் கப்படும் என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.